என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு

"காகிதமில்லா சட்டமன்றம்" என்னும் இலக்கினை எய்திடும் வகையில் பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிக்கைகள், ஆண்டறிக்கைகள், தணிக்கை அறிக்கைகள், ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது அனுமதிக்கப்பட்ட திருத்தங்கள் ஆகியவை உறுப்பினர்களுக்கு மென்பொருள் வடிவில் மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. காகிதமில்லா சட்டமன்றம் என்னும் நிலையினை உருவாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையின் தொடர்ச்சியாக இன்றைய 5–2–2021 நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அவைமுன் வைக்கப்பெறும் ஏடுகளில் ஆ–வில் வரிசை எண்கள் 25 முதல் 35 வரையுள்ள 11 அறிவிக்கைகள் மற்றும் வரிசை எண்கள் 36 முதல் 46 வரையுள்ள 11 ஆண்டறிக்கைகள், தணிக்கை அறிக்கைகள் ஆகியவற்றின் மென்பொருள் வடிவம் PDF முறையில், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படும் என்பதை பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது அனுமதிக்கப்பட்ட திருத்தங்களின் மென்பொருள் வடிவம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பதை பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்குறிப்பிட்ட அறிவிக்கைகள், ஆண்டறிக்கைகள், தணிக்கை அறிக்கைகள் மற்றும் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது அனுமதிக்கப்பட்ட திருத்தங்கள் ஆகியவற்றின் பத்து பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக

2021 பிப்ரவரி 5]

கலைவாணர் அரங்கத்தின் முதல் தளத்தில் உள்ள சட்டமுன்வடிவு–1 பிரிவில் வைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) இந்திய தண்டனைத் தொகுப்பு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2021 ஆம் ஆண்டு இந்திய தண்டனைத் தொகுப்பு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2021 ஆம் ஆண்டு இந்திய தண்டனைத் தொகுப்பு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*